**இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழ – 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக்கழக கல்லூரியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான

கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர், கொடுப்பனவு வவுச்சர் முதலிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுதல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 76 (இ) பந்தியின் பிரகாரம் அறிக்கை செய்யப்படும் நாளின் பின்னர் 12 மாதங்களுக்குள் அடையப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற சொத்துக்கள் நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தப்பட வேண்டியிருப்பினும் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 4,756,311 ஆன குறுங்கால முதலீடு நடைமுறையல்லாத சொத்தின் கீழும், கூட்டுத்தொகை ரூபா 48,000,000 ஆன நிலையான வைப்பு நடைமுறை சொத்தின் கீழும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | காலத்தின் மீது மட்டும் அடிப்படையாகக் கொண்டு வைப்பு வகைப்படுத்தல் நிதிக் கூற்றுக்களினை பயன்படுத்துவோருக்கு உண்மையான மற்றும் சரியான நிதி விம்பத்தினை முன்வைப்பதற்கு தடையாகும். ரூபா 110,000 ஆன ஆறு மாத நிலையான வைப்பு குறுங்கால முதலீடாக வகைப்படுத்தப்படுவதற்கு வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். ரூபா 48,000,000 பெறுமதியான 13 நிலையான வைப்புகள் தேவைப்படுமிடத்து கையகப்படுத்தும் நோக்கில் பேணிச் செல்லப்படுகின்றது. எனவே, நோக்கத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் முதலீடுகள் வகைப்படுத்தல் மிகவும் பொருத்தமானதாகும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பிடப்படாமையின் காரணத்தினால் கிரயம் ரூபா 122,189,698 ஆன நிலையான சொத்து முழுமையாக தேய்மானம் செய்திருப்பினும், இன்னுமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 649 இன் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே, கணக்கீட்டு நியமம் 07 இக் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் வகுப்பே முழுமையான மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியங்களிற்கு இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 10,026,815 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 40,787,889 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 50,814,704 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு அரச அளிப்புகள் ரூபா 20,811,000 இனால் அதிகரித்தல், வெளி செயற்திட்ட செலவினம், ஏனைய செலவினம் மற்றும் போக்குவரத்து செலவினம் ரூபா 21,599,409 இனாலும், தனிநபர் ஊதிளம் ரூபா 17,778,078 இனால் குறைந்தமையும் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 நிதியங்களுக்கு தொடர்புடையதாக நிலையான வைப்புக்களாக ரூபா 24,212,096 மற்றும் சேமிப்புக்களாக ரூபா 3,380,963 காணப்படினும் குறிக்கோள் நிறைவேற்றிக் கொள்வதற்காக அந் நிதியம் மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட அளவுக்கோளின் பிரகாரம் நிதியம் பயன்படுத்தும் திறன்/ சந்தர்ப்பங்கள் மற்றும் மேற்கொள்ளும் முறைமை தொடர்பாக கல்விசார் மற்றும் கல்விசாரா பகுதித் தலைவர்கள் விழிப்புணர்வு மேற்கொள்ளல் 2020.12.18 ஆம் திகதி நடைப்பெற்றதுடன் காணப்பட்ட தொற்று நோய் காரணத்தினால் கல்விசார் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படல் காரணத்தினால் நிதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய குறிக்கோள்கள் நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதி பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | 2017 திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2018 யூலை மாதத்தில் முடிவறுத்தப்படவேண்டியிருந்த விடுதி உபநிர்வாகி உத்தியோகப்பூர்வ இல்லம் II நிர்மாணிப்பு ஒப்பந்தத்திற்காக ரூபா 3,967,271 செலவிடப்பட்டு கட்டிடத்தின் பகுதியொன்று மட்டும் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் கைவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மீண்டும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த நிறுவனம் வருகை தராமை காரணத்தினால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2021.02.11 ஆம் திகதி தொரடபுடைய ஒப்பந்த நிறுவனத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் 2021.04.28 ஆம் திகதி செயற்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. | நிர்மாணிப்பு நடவடிக்கைகள் விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு தொடர்புடையதாக முதுகலை பட்டத்திற்காக பதிவு செய்திருந்த மாணவர்கள் எண்ணிக்கை 439 தொடக்கம் 180 வரை தொடர்ந்து குறைவொன்று காணக்கூடியதான இருந்ததுடன் கற்கைநெறி கட்டணம் அதிகரித்தல் மற்றும் நாட்டினுள் வேறு முதுகலை பட்ட நிறுவனங்கள் அமைந்திருத்தல் இதற்கு காரணங்களாயிருந்தன. | பல்கலைக்கழகங்களில் பௌத்த கல்வி துறையில் முதுகலை பட்ட கற்கைநெறி உருவாகல் மற்றும் போட்டிநிலை, வெளிநாட்டு மாணவர்களின் கற்கைநெறிக் கட்டணம் அதிகரித்தல் ஆகிய விடயங்கள் நடைமுறையில் காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 நிலையும் தாக்கமளித்திருந்தது. | முதுகலைப் பட்டத்திற்காக பதிவு செய்கின்ற மாணவர் எண்ணிக்கை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தில் 2020 திசெம்பர் 31 இற்கு அங்கீகரிக்கப்பட்ட பணிநிலையினர் 67 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான பணிநிலையினர் 56 ஆக காணப்பட்டதினால் 11 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் உள்ளடக்கப்பட்டிருந்த நூலகர் பதவி 2015 தொடக்கம் வெற்றிடமாக காணப்பட்டது. | 11 வெற்றிட பதவிகளுக்காக 2020 திசெம்பர் மாதம் விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டதுடன் எஞ்சிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நூலகர் பதவிக்காக பெறப்பட்ட விண்ணப்பப்டிவத்தின் மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் வினைத்திறனாக பேணிச் செல்வதற்காக வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |